அசல்

13.5.42. சி.அ.சி. காசிநாதன்

அசல் – 1

உ
சிவமயம்

C.A.C. KASINATHAN CHETTIAR.

LAKSHIMI VILAS,
KOTHAMANGALAM.
13.5.42.

அன்பார்ந்த நண்பரீர்,

தங்களின் அருமைப்பிதாவும், எனது மதிப்புவாய்ந்த நண்பரும், தமிழ்த்தாயின் அருந்தவப்புதல்வருமான மகாமஹோபாத்தியாய ஸ்ரீ சுவாமி நாத அய்யரவர்கள் தமது தள்ளாதவயதில் திருக்கழுக்குன்றத்தில் காலமாகிவிட்டதாகக் கேழ்வியுற்று திடுக்கிட்டேன். அவர்கள் நம் தாய்மொழியாய தமிழ் மொழிக்கு செய்திருக்கும் தொண்டு சாமானியமானதன்று. அவர்களின் அரிய குணங்களும், உயரிய நோக்கங்களும், சிவபெருமானிடத்து அவர்கள் கொண்டுள்ள இடையரா பக்தி விஸ்வாசமும், அன்பர்களிடத்தில் அவர்கள் காட்டிய பேரன்பும், அருமை மொழிகளும் [redacted] சொல்லுதற்கெளிதல்ல. இத்தகைய பெரியாரி[redacted]ன் அகால மரணமானது என்போன்ற நண்பர்களுக்கும் தமிழ் மாந்தர்களுக்கும் ஆற்றொணாத் துக்கத்தை அளிக்கின்றது. தமிழ் நாட்டில் இவர்கள் ஸ்தானம் பூர்த்திசெய்வது எளிதல்ல. இத்துக்ககரமான சம்பவத்தால் தங்களுக்கேற்பட்டிருக்கும் ஆற்றொணாத் துயரத்துக்கு எனது மனப்பூர்வமான அநுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்ப்பெரியாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

தங்கள் அன்புள்ள,

சி.அ.சி. காசிநாதன்.

அசல்

13.5.42. சி.அ.சி. காசிநாதன்

அசல் – 1


copied
To
S. Kalyanasundaram -
- Aiyer Avl
"Thiyagaraja Vilas",
45 Sannidhi St
~~Thiruvetteeswarampet~~
~~Triplicane~~
Tirukalukundram
~~Madras~~.

அசல்

13.5.42. சி.அ.சி. காசிநாதன்

அசல் —1

